டால்பின்

DOLPHIN
Primary Books

# சுந்தரத்தமிழ் இலக்கணப் பயிற்சி

## நூல் தொடர்



6

## 3. இனவெழுத்துகள்

மனிதர்களைப் போலவே எழுத்துகளுக்கும் நட்பும், இனமும் உண்டு.
நட்பு எழுத்துகளை **இனவெழுத்துகள்** என மரபிலக்கணம் கூறுகிறது.

இவ்வெழுத்துகள் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு ஆகியவற்றுள் ஒன்று மற்றொன்றை ஏதேனும் ஒருவகையில் ஒத்திருக்கும்.

1. உயிர் எழுத்துகளில் உயிர் குற்றெழுத்துகளுக்கு உயிர் நெட்டெழுத்துகள் இனமாகும்.
   அ – ஆ, இ – ஈ, உ – ஊ, எ – ஏ, ஒ – ஓ

2. 'ஐ' என்னும் உயிரெழுத்து 'இ' என்னும் உயிரெழுத்தையும் 'ஔ' என்னும் உயிரெழுத்து 'உ' என்னும் உயிரெழுத்தையும் இனமாகக் கொள்ளும்.
   அ + இ = ஐ அ + உ = ஔ

3. மெய்யெழுத்துகளில் வல்லினமெய் ஒவ்வொன்றுக்கும் மெல்லின மெய் இனமாகும்.
   க் – ங், ச் – ஞ், ட – ண், த் – ந், ப் – ம், ற் – ன்

4. உயிர்மெய்யெழுத்துகளில் வல்லினமும் மெல்லினமும் இனமாகவே வரும்.
   க – ங ச – ஞ ட – ண த – ந ப – ம ற – ன
   (எ.கா) சிங்கம், மஞ்சள், பந்தல்

5. சொல்லில் நட்பு எழுத்துகள் பெரும்பாலும் சேர்ந்தே அமைந்திருக்கும்.
   (எ.கா) பண்டம், கம்பன், தென்றல்

### பயிற்சி – 3

I. 1. 'ண்' என்னும் எழுத்துக்கு இனவெழுத்து --------

2. 'ற்' என்னும் எழுத்துக்கு இனவெழுத்து --------

3. 'ஞ்ச' இனவெழுத்துகள் வரும்படி ஐந்து சொற்கள் எழுதுக.
   ஞ்ச , ஞ்ச , ஞ்ச , ஞ்ச , ஞ்ச
   -------- -------- -------- -------- --------

4. 'ந்த்' இனவெழுத்துகள் வரும்படி ஐந்து சொற்கள் எழுதுக.
   ந்த் , ந்த் , ந்த் , ந்த் , ந்த்
   -------- -------- -------- -------- --------

5. 'ஐ' என்னும் எழுத்துக்கு இனவெழுத்து --------

6. 'ஔ' என்னும் எழுத்துக்கு இனவெழுத்து --------

## பயிற்சி – 7

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :**

1. சென்னை என்பது -------------
   (அ) காலப்பெயர் (ஆ) குணப்பெயர் (இ) இடப்பெயர்

2. மரத்தில் பூ பூத்துள்ளது.-------------
   (அ) பொருட்பெயர் (ஆ) சினைப்பெயர் (இ) தொழிற்பெயர்

3. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் -------------
   (அ) பண்புப்பெயர் (ஆ) காலப்பெயர் (இ) இடப்பெயர்

4. உயிர்களிடம் அன்பு காட்டு -------------
   (அ) பொருட்பெயர் (ஆ) பண்புப்பெயர் (இ) காலப்பெயர்

5. வாணி கோவிலுக்குச் சென்றாள் -------------
   (அ) சினைப்பெயர் (ஆ) பொருட்பெயர் (இ) இடப்பெயர்

**II. பெயர்ச் சொற்களை எடுத்து எழுதுக**

எழிலன் காலையில் தோட்டத்திற்குச் சென்றான். மரக்கிளையில் பச்சைக்கிளி இருந்ததைக் கண்டான். குயிலின் பாடல் கேட்டு மகிழ்ந்தான்.

பொருட்பெயர் :-

இடப்பெயர் :-

காலப்பெயர் :-

பண்புப்பெயர் :-

சினைப்பெயர் :-

தொழிற்பெயர் :-

**III. விடை எழுதுக.**

1. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. காலப்பெயரை விளக்கி எ.கா. தருக.
3. பண்புப்பெயரை விளக்கி எ.கா. தருக.

## 12.எண்

எண் என்பது எண்ணிக்கையைக் குறிப்பதாகும். ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும். ஒன்றனைக் குறிப்பது ஒருமை. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

ஒருமை - பூ, மாணவன் பன்மை - பூக்கள், மாணவர்கள்

பெயர் ஒருமையில் இருந்தால் வினை முடிவதும் ஒருமையாகவே இருத்தல் வேண்டும்.

(எ.கா) சிறுமி ஓடினாள்

மலர் மலர்ந்தது

பெயர் பன்மையில் இருந்தால் வினை முடிவதும் பன்மையிலேயே இருத்தல் வேண்டும்.

(எ.கா) சிறுமிகள் ஓடினர்.

மலர்கள் மலர்ந்தன.

### பயிற்சி-15

**I.சொற்றொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக :**

1. காற்று வீசின; மரங்கள் அசைந்தது
2. செல்வனும், செல்வியும் பள்ளிக்குச் சென்றார்.
3. நாளைக்கு நான் ஊருக்குப்போய்ச் சேர்வார்கள்.
4. பசு தோட்டத்தில் மேய்ந்தன.
5. பூக்கள் தோட்டத்தில் மலர்ந்து இருந்தது.

**II.எடுத்துக்காட்டில் உள்ளது போல் எழுது**

| | | |
|---|---|---|
| | படி | 1. நான் படித்தேன் |
| நான் | ஓடு | 2. |
| | தூங்கு | 3. |
| | விளையாடு | 1. மாணவர்கள் விளையாடினார்கள் |
| மாணவர்கள் | எழுது | 2. |
| | படி | 3. |
| | சாப்பிடு | 1. நீ சாப்பிட்டாய் |
| நீ | நட | 2. |
| | வாங்கு | 3. |
| | ஆடு | 1. கவிதா ஆடினாள் |
| கவிதா | பாடு | 2. |
| | குதி | 3. |
| | பேசு | 1. அவர்கள் பேசுகின்றனர். |
| அவர்கள் | வா | 2. |
| | நில் | 3. |

## சொல்விளையாட்டு- பயிற்சி – 21

**கட்டங்களை நிரப்புங்கள்:**

**வட்டமிட்ட எழுத்துகளை ஒன்று சேர்த்து அழகிய தமிழ்ச்சொல்லை கண்டுபிடி.**



1. மஞ்சள் நிறத்தில் இருக்கும் பூ 'தி' என்று முடியும் பூ ....

2. இது உதைபடுவது போல யாரும் படமாட்டார்கள் .....

3. அதிசயத்துக்கு மறுபெயர்....

4. இது இல்லாவிட்டால் ரொம்பவும், துன்பந்தான்; சமயத்தில் தூக்கியும் அடிக்கும்.

5. இதுவும் ஓர் உரைதான் .... ஆனால் வாழ்த்துடன் ....

**விடைகள் :**

1.---------------- 2.---------------- 3.----------------

4.---------------- 5.----------------

**கிடைக்கும் தமிழ்ச்சொல்:** ----------------

## 18.நிறுத்தற்குறிகள் அறிந்து கொள்வோம்.

நாம் பேசும்போது கருத்து விளங்குமாறு நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும், குரலை உயர்த்தியும், தாழ்த்தியும் பேசுகிறோம். அதுபோலப் படிப்பவர்களுக்கு நம் கருத்துகளும் உணர்ச்சிகளும் விளங்குமாறு நிறத்த வேண்டிய இடங்களில் நிறுத்தற் குறிகள் அமைத்து எழுத வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | காற்புள்ளி | ( , ) | மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும். |
| 2. | அரைப்புள்ளி | ( ; ) | சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்றான்; பகைவரை வென்றான்; நாடு திரும்பினான். |
| 3. | முக்காற்புள்ளி | ( : ) | முத்தமிழ் : இயல், இசை, நாடகம். |

# பன்முறை எழுதிப்பழகு

Complete range of DOLPHIN products available online at: amazon.in

தமிழ் மாதங்களின் பெயர்களை வட்டமிட்டு வரிசையாக எழுதுக.

சித்திரம் கார்த்திகை பை தேம்பாவணி
சித்திரை வைகாசி ஆடி
ஆவணி
மாசி புரட்சி தை ஐப்பசி
ஆணி மூடுபனி வாசி ஐம்புலன்
ஆனி
புரட்டாசி சிவகாசி கதகளி
இடி மார்கழி ஒத்திகை பங்குனி

| | |
|---|---|
| 1. .................... | 7. .................... |
| 2. .................... | 8. .................... |
| 3. .................... | 9. .................... |
| 4. .................... | 10. .................... |
| 5. .................... | 11. .................... |
| 6. .................... | 12. .................... |

தனியாப் பேனா பயன்படுத்தவும்.

Designed, Printed & Published By :
Sekar Publishers
An ISO 9001:2000 Certified Company
3/1078/2, Meenampatti, Sattur Road, Sivakasi - 626189 Tamilnadu - India.
Tel : +914562 274132 Email: sekarpublishers@gmail.com

DOLPHIN® Primary Books

ISBN 978-93-83753-14-7

Log on to: www.dolphinprimarybooks.com